53

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 01/பேரூ/2022

நாள் 07.04.2022

திரு. மு. அருணாசலம்,
சக்கம்பட்டி, ஆண்டிப்பட்டி ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆண்டிப்பட்டி பேரூராட்சி, ... எதிர்மனுதாரர்

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட எண்.23A முத்துமாரியம்மன் கோவில் தெரு, சக்கம்பட்டி என்ற முகவரியைச் சேர்ந்த திரு. மு. அருணாசலம் என்பவரின் 04.01.2022 புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.01.2022ல் பெறப்பட்டு, 01/2022என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட எண்.23A முத்துமாரியம்மன் கோவில் தெரு, சக்கம்பட்டி என்ற முகவரியைச் சேர்ந்த திரு. மு. அருணாசலம் என்பவர் அளித்துள்ள புகார் மனுவில் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தில் திரு. கந்தசாமி மூப்பனார் மனைவி பழனியம்மாளுக்கு ரூ.2,60,000 பணம் ஒப்பளிப்பு செய்தது சட்டப்படி குற்றமென்றும், 360 சதுர அடி வேண்டியதற்கு மாறாக திருமதி. பழனியம்மாள் 300 சதுர அடியில் வீடு கட்டியுள்ளார் என்றும், மேலும் தனியாருக்கு பாத்தியப்பட்ட 3 அடி நடைபாதையை ஆக்கிரமித்து கட்டப்பட்ட கட்டிடத்தை அகற்றிடக் கோரி சொல்லியும் இதுநாள் வரையில் நடைபாதையை அகற்றவில்லை என்று தெரிவித்துள்ளார். பசுமை வீடு சுமார் 360க்கு மேல் இருக்கும். ஆனால் பேரூராட்சியில் 60 பசுமை வீடுகள் என்று

கூறுகிறார்கள் என்றும், அரசாணை கேட்டால் பணம் கட்டச் சொல்லியதன் அடிப்படையில், பலமுறை அலைந்தும் தனக்கு அரசாணை வழங்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14,16 மற்றும் 18ல் சட்டத்திற்கு புறம்பாக தண்ணீர் திருட்டில் ஈடுபடுவதாக வரப்பெற்ற புகாரின் அடிப்படையில், ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டு, தேனி மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்தரவின்படி அனுமதியற்ற குழாய் இணைப்புகள் கண்டறியப்பட்டு முறைபடுத்தப்பட்டுள்ளதாகவும், 24 மணி நேரமும் குடிநீர் பெறுகின்ற குழாய் இணைப்புகள் ஆய்வு செய்யப்பட்டு வருகிறதென்று தகவல் அளித்துள்ளனர் என்றும், இது குறித்து தகவல் ஆணையருக்கு 22.9.2021ல் மேல்முறையீடு செய்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், 2018 முதல் 2021 வரை எந்த புகார் மனுவிற்கும் முறையாக நடவடிக்கை எடுப்பதில்லை என்றும், எனவே தமது புகார் குறித்து விசாரணை மேற்கொண்டு உரிய ஆணையினை பிறப்பிக்குமாறு கோரி இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்துள்ளார். மனுதாரர் தமது புகார் குறித்து ஆண்டிப்பட்டி பேரூராட்சி பொது தகவல் அலுவலர்/செயல் அலுவலரால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட14.7.2021, 24.8.2021 மற்றும் 22.11.2021 நாளிட்ட கடித நகல்களையும் இதர ஆவணங்களையும் தனது புகார் மனுவுடன் இணைத்தனுப்பியுள்ளார்.

2. ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 23.03.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ 16.03.2022 நாளிட்ட அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டன. முறையீட்டு மனுதாரர் மற்றும் ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் 23.3.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி வாக்குமூலம் அளித்துள்ளனர்:-

3. மனுதாரர் திரு. மு. அருணாசலம் அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "ஆண்டிப்பட்டி பேரூராட்சியில் அனைவருக்கும் வீடு என்கின்ற திட்டத்தில் ஆண்டிப்பட்டியைச் சேர்ந்த கந்தசாமி என்பவரின் மனைவி பழனியம்மாளுக்கு வீடுகட்ட அரசின் உதவித் தொகை ரூ.2.60 லட்சம் முறைகேடாக அளித்துள்ளனர். மேற்கண்ட பழனியம்மாளிடம் வருவாய் சான்றிதழ் போன்ற ஆவணங்கள் எதையும் பெறாமல் பேரூராட்சி அலுவலர்கள் ஒதுக்கீடு செய்துள்ளனர். திருமதி. பழனியம்மாள் பொது நடைபாதை இடத்தை 3 அடி ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டியுள்ளார். இது தொடர்பாக பேரூராட்சியில் தெரிவித்தபோது துப்புரவு ஆய்வாளர் திரு. மணிகண்டன் நடைபாதையை அகற்ற வேண்டுமானால் நீதிமன்றத்திற்கு சென்று தீர்வு காணுமாறு கூறி என்னை அலைகழித்தார். ஆண்டிப்பட்டி பேரூராட்சியில் அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழான வீடுகளை தனியர் சிலர் கட்டும்போது, அதனை சட்டத்திற்கு புறம்பாக மாடி வீடுகளாக கட்டியுள்ளனர். அதற்கு பேரூராட்சியும் ஒப்புதல் அளித்துள்ளது. அனைவருக்கும் வீடு என்கின்ற திட்டத்தில் முறையான சான்றிதழ்கள் பெறாமல் முறைகேடாக பலருக்கு வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. எனவே, மேற்கண்ட முறைகேடுகள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், அதற்குக் காரணமான பேரூராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் 23.03.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் “பசுமை வீடுகளை தனியர்கள் பெறுவதற்கு, இடத்திற்கான பட்டா, பத்திரம், பழைய வீட்டின் புகைப்படம் ஆகியவற்றின் நகலினை பேரூராட்சியில் சமர்ப்பிக்க வேண்டும். அனைவருக்கும் வீடு கட்டுவதற்கு ஒரு வீட்டிற்கு ரூ.2.10 லட்சம் ஒதுக்கப்படுகிறது. அனைவருக்கும் வீடு திட்டத்தில் ஆண்டிப்பட்டி பேரூராட்சியில் 195 வீடுகள் ஒதுக்கப்பட்டு, 183 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 12 வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. மேலும், மனுதாரர் தெரிவித்துள்ள நடைபாதை ஆக்கிரமிப்பு தொடர்பாக வட்டாட்சியருக்கு டிசம்பர் 2021ல் கடிதம் அனுப்பப்பட்டு அவரது பதிலறிக்கை பெறப்படவில்லை. அவரது அறிக்கை பெறப்பட்டதும், நடைபாதை ஆக்கிரமிப்பை அகற்றிட உரிய நடவடிக்கை உடனே எடுக்கப்படும் என இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அனைவருக்கும் வீடு திட்டத்தில் கந்தசாமி–பழனியம்மாள் அவர்கள் தரைதளம் மற்றும் முதல் தளம் கட்டியுள்ளதாக மனுதாரர் தெரிவித்துள்ளார். அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தில் 300 சதுர அடி இடம் இருக்க வேண்டுமெனவும், அதற்குக் குறைவாக இடம் இருந்தால் தரைதளம் மற்றும் முதல் தளம் கட்டிக்கொள்ளலாமென பேரூராட்சியின் முன்னாள் உதவி இயக்குநர் திரு. சேதுராமன் மற்றும் முன்னாள் உதவி செயற் பொறியாளர் திரு. கருப்பையா தெரிவித்ததன்பேரில், மாடி வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

5. ஆண்டிப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மனுதாரரது புகார் மனு மீது அளித்துள்ள 23.3.2022 நாளிட்ட விளக்க அறிக்கையில் ஆண்டிப்பட்டி பேரூராட்சியில் 2016–2017ஆம் ஆண்டில் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தில் கந்தசாமி–பழனியம்மாள் அவர்களுக்கு அரசு விதிமுறைகளுக்குட்பட்டு தரைதளம் மற்றும் முதல் தளம் இரண்டும் சேர்த்து 300 சதுர அடியில் கட்டிடம் கட்டியுள்ளார். அவரால் கட்டப்பட்டுள்ள வீட்டில் ஆக்கிரமிப்பு ஏதுமுள்ளதா என்பதை கண்டறிந்து அறிக்கை அனுப்புமாறு வட்டாட்சியருக்கு பேரூராட்சி கடித ந.க.எண்.974/2021 நாள் 03.12.2021ல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நில அளவை செய்து ஆக்கிரமிப்பு இருப்பின், ஆக்கிரமிப்பை உடன் அகற்றிட நடவடிக்கை எடுக்கப்படுமென்று குறிப்பிட்டுள்ளார்.

6. மனுதாரரின் புகார் மனு மற்றும் அதனுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், மனுதாரரது வாக்குமூலம் மற்றும் ஆண்டிப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரது வாக்குமூலம், வாக்குமூலத்துடன் அளிக்கப்பட்ட விளக்க அறிக்கை மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- மனுதாரர் அளித்துள்ள புகார் மனுவில் அனைவருக்கும் வீடு என்கின்ற திட்டத்தின் கீழ் திரு. கந்தசாமி மூப்பனார் மனைவி திருமதி. பழனியம்மாளுக்கு ரூ.2.60 லட்சம் வழங்கப்பட்டுள்ளது சட்டப்படி குற்றமென்றும், இவர் தனியாருக்கு பாத்தியப்பட்ட 3 அடி நடைபாதையை ஆக்கிரமித்து கட்டியுள்ளார் என்றும், கட்டப்பட்ட கட்டிடத்தை

அகற்றிடக்கோரி பலமுறை பேரூராட்சியில் கூறியபின்னரும், இதுநாள் வரை நடைபாதையை அகற்றவில்லை என்று புகார் அளித்துள்ளார்.

- தனது புகார் குறித்து ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு அளித்துள்ள தகவல் அறியும் உரிமைச் சட்ட விண்ணப்பத்தில் "ஆண்டிப்பட்டி பேரூராட்சியில் 2016–2017ஆம் ஆண்டு அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தில் கந்தசாமி–பழனியம்மாள் அவர்கள் 300 சதுர அடி இருந்தால் மட்டும் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தில் சேர்த்து வீடு ஒதுக்கீடு செய்யவேண்டும். ஆனால் 180 சதுர அடியில் வீடு கட்டியுள்ளதால், அரசு பணம் ரூ.2.60 லட்சம் மோசடி செய்துள்ளனர் என்பதை பற்றிய விவரம் தருமாறு" கோரியதற்கு அளிக்கப்பட்டுள்ள 24.8.2021 நாளிட்ட பதிலறிக்கையில் ஆண்டிப்பட்டி பேரூராட்சியில் 2016–2017ஆம் ஆண்டு அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தில் கந்தசாமி–பழனியம்மாள் அவர்கள் அரசு விதிகளுக்குட்பட்டு தரைதளம் மற்றும் முதல் தளம் இரண்டும் சேர்த்து 300 சதுர அடியில் கட்டடம் கட்டியுள்ளார் என்று தகவல் அளித்துள்ளார்.
- தேனி மாவட்ட ஆட்சித் தலைவரால் தேனி மாவட்ட அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதம் ந.க.எண்.9975/2016/பேரூ.3 நாள் 11.5.2017ல் பாரத பிரதமரின் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் தேனி மாவட்டத்திலுள்ள பேரூராட்சிகளில் வசிக்கும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு குடிசை மற்றும் மண் வீடுகளை சூரிய மின்னாற்றலுடன் கூடிய கான்கிரீட் வீடுகளாக மாற்றுவதற்கு 2016–2017ஆம் ஆண்டிற்கு இரண்டாம் கட்டமாக மொத்தம் 1241 வீடுகள் கட்டுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதென்றும், அதனில் ஆண்டிப்பட்டி பேரூராட்சியில் 60 வீடுகள் கட்டுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், தேனி மாவட்டத்தில் உள்ள பயனாளிகளுக்கு பணி ஆணை வழங்கி பணிகளை துவக்கிடவும், பயனாளிகளின் விபரங்களை இணையதளத்தில் 7C மற்றும் 4B விவரங்களை பதிவேற்றம் செய்யவும், பதிவேற்றம் செய்ததற்கான அறிக்கையினை 22.5.2017ஆம் தேதிக்குள் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்குமாறும் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது அறியப்படுகிறது.
- அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தில் பட்டா மற்றும் பத்திரப் பதிவு செய்யப்பட்ட இடமுள்ள பயனாளிகள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டு வீடுகள் கட்ட பணி உத்தரவு வழங்கப்படவேண்டும். பணி நிலைக்கேற்ப தொகைகள் பயனாளியின் வங்கிக் கணக்கிலேயே ECS மூலம் வழங்கப்படவேண்டும்.
- கட்டப்படவேண்டிய குடியிருப்புகளின் பரப்பளவு மற்றும் புல எண், சம்பந்தப்பட்ட பேரூராட்சி பொறியாளர் மற்றும் செயல் அலுவலர் மூலம் கள ஆய்வு மேற்கொண்ட பின்னரே பணியை தொடங்க வேண்டும். கட்டப்படும் வீட்டின் பரப்பளவு 300 சதுர அடிக்கு குறையாமல் கட்டப்பட வேண்டும்.
- மனுதாரரால் புகார் அளிக்கப்பட்டுள்ள திரு. கந்தசாமி மூப்பனார் மனைவி திருமதி. பழனியம்மாளுக்கு அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூ.2.60 லட்சம் முறைகேடாக வழங்கப்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ள நிலையில்,

மனுதாரரின் புகார் தொடர்பாக ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் அளிக்கப்பட்டுள்ள விளக்க அறிக்கையில் மனுதாரரது புகார் குறித்து தெளிவான விளக்கம் ஏதும் அளிக்கப்படவில்லை. பயனாளி எப்பொழுது தெரிவு செய்யப்பட்டார், அவருக்கான பணி ஆணை எப்பொழுது பேரூராட்சியால் வழங்கப்பட்டது, அதன் நகல் மற்றும் அவர் வீடு கட்டும் முன்பு அவரது இடம் பேரூராட்சி பொறியாளர் மற்றும் செயல் அலுவலரால் முறையாக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதா, அவரது இடத்திற்கான ஆவண நகல், பயனாளி வீடு கட்டிய போது எந்தெந்த தேதிகளில் அவருக்கான தொகை வழங்கப்பட்டன போன்ற எந்தவொரு விவரமும் இடம்பெறவில்லை.

- மேலும், தனியர் 3 அடி நடைபாதையை ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளதாக புகார் தெரிவித்தும், அதன் மீது இதுவரை பேரூராட்சி நடவடிக்கை மேற்கொள்ளாத நிலையில், மனுதாரர் தனது புகார் குறித்து பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் தகவல்களை வழங்கிடக் கோரியும் தொடர் முயற்சிகளை மேற்கொண்டதன் அடிப்படையில், ஆண்டிப்பட்டி பேரூராட்சி கடிதம் ந.க.எண்.974/2021 நாள் 03.12.2021ல் ஆக்கிரமிப்பு தொடர்பாக வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டு, அவரது அறிக்கை இன்னமும் கிடைக்கப்பெறாத நிலையில், அவரது அறிக்கை கிடைக்கப் பெற்றதும் நடைபாதை ஆக்கிரமிப்பை அகற்றிட உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென்று தெரிவித்துள்ளது ஏற்கத்தக்கதல்ல.

- மனுதாரர் திருமதி. பழனியம்மாள் 180 சதுர அடியில் வீடு கட்டியுள்ளதாக புகார் தெரிவித்துள்ள நிலையில், அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தில் 300 சதுர அடிக்கு குறைவான இடமிருந்தால், தரைதளம் மற்றும் முதல் தளம் கட்டிக்கொள்ளலாமென பேரூராட்சியின் முன்னாள் உதவி இயக்குநர் திரு. சேதுராமன் மற்றும் முன்னாள் உதவி செயற் பொறியாளர் திரு. கருப்பையா ஆகியோரின் வாய்மொழி உத்தரவின்பேரில் மாடி வீடுகளை கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளதென்று ஆண்டிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார். பேரூராட்சியின் திட்ட செயலாக்கத்திற்கு முழுப் பொறுப்பாளரான பேரூராட்சி செயல் அலுவலர் திட்ட நிபந்தனைகளை தான் உறுதி செய்துகொள்ளாமல், முன்னாள் உதவி இயக்குநர் மற்றும் முன்னாள் உதவி செயற் பொறியாளர் வாய்மொழி உத்தரவின்பேரில், மாடி வீடு கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளது ஏற்கத்தக்கதல்ல.

- மேலும் மனுதாரரது புகார் குறித்து விரிவான விளக்க அறிக்கை அளிக்கவேண்டிய நிலையில், மிகச் சுருக்கமாக திருமதி. பழனியம்மாள் அரசு விதிமுறைகளுக்குட்பட்டு தரைதளம் மற்றும் முதல் தளம் இரண்டும் சேர்த்து 300 சதுர அடியில் வீடு கட்டியுள்ளார் என்று மட்டும் தெரிவித்துள்ளதைத் தவிர, ஒரே ஒரு புகாருக்கு சரியான விளக்கமும், இதரஆவணங்களின் நகல், பயனாளிக்கு பணம் அளிக்கப்பட்ட விவரங்கள், பணி ஆணை வழங்கப்பட்ட நாள், அதன் நகல், இறுதியாக பணம் ECS மூலம் வழங்கப்பட்ட நாள், பேரூராட்சி பொறியாளர்களால் தள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதா இல்லையா போன்ற எந்தவொரு விவரங்களையும் தெளிவாக குறிப்பிடாதது மற்றும் பயனாளிக்கு எவ்வளவு தொகை

வழங்கப்பட்டுள்ளது என்பன போன்ற முறையான தகவல்களை வழங்காததை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது.

- கட்டிட கட்டுமானப் பணி நடைபெறும் போது, பயனாளியால் வழங்கப்பட்ட ஆவணத்தின் அடிப்படையில், கட்டுமானம் நடைபெறுகிறதா என்பதை கண்டறியாமல், கட்டி முடிக்கப்பட்ட பின்னர் தற்போது ஆக்கிரமிப்பு உள்ளதா என்பதை கண்டறிந்து அறிக்கை அனுப்புமாறு வட்டாட்சியர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அவரது அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர் ஆக்கிரமிப்புகள் இருப்பின், அதனை அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளது ஏற்கத்தக்கதல்ல. இதனால் பயனாளியும் பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்படக்கூடுமென்பதால், இதனை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவேண்டும்.

7. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், முறையீட்டு மனுதாரர் திரு. மு. அருணாசலம் அளித்துள்ள புகார் மனுவின் அடிப்படையில் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தில் இதுவரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வீடுகளுக்கு பயனாளிகள் தேர்வு செய்யும் முறை, பயனாளிகளால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள், பணி ஆணை வழங்கிய விவரம், பயனாளிகள் வீடு கட்டும்போது தொகை விடுவிக்கப்பட்ட விவரம் போன்றவற்றை ஒரு குழு அமைத்து ஆய்வுசெய்ய பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், திரு. கந்தசாமி மூப்பனார் மனைவி திருமதி. பழனியம்மாளுக்கு வழங்கப்பட்ட தொகை முறையாக உரிய ஆவணங்களின் அடிப்படையிலும் உரிய விதிமுறைகளின்படியும் வழங்கப்பட்டுள்ளதா என்பதை பேரூராட்சி ஆவணங்களை ஆய்வு செய்து உறுதி செய்திடுமாறு தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். இதில் ஏதும் முறைகேடுகளோ அல்லது விதி மீறல்களோ கண்டறியப்பட்டால், சம்மந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் அலுவலர்கள் மீது உரிய விதிகளின்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பேரூராட்சிகளின் ஆணையாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு திருமதி. பழனியம்மாள் பொதுப் பாதையை ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளது குறித்து வட்டாட்சியரிடம் கோரப்பட்டுள்ள அறிக்கையினை விரைந்து பெற்று அதன் மீது இரண்டு மாத காலத்திற்குள் நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

2022ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 07–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/ x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. மு. அருணாசலம்,
23A, முத்துமாரியம்மன் கோவில் தெரு,
சக்கம்பட்டி, ஆண்டிப்பட்டி வட்டம், தேனி மாவட்டம்–625 512

செயல் அலுவலர், ஆண்டிப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி,
ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டம்
மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மாவட்டம், தேனி.
வட்டாட்சியர், ஆண்டிப்பட்டி வட்டாட்சியர் அலுவலகம், ஆண்டிப்பட்டி–625 512
பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர், தேனி மண்டலம், தேனி–625 582

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

செயலாளருக்காக